


சென்னை கலைவாணர் அரங்கத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், பதிவு நடைமுறைகள் குறித்து நேற்று முன்தினம் (27.07.2023) கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர் (சீட்டு & சங்கம்) அ.முகமது ஜாபர் சாதிக், கூடுதல் பதிவுத்துறை தலைவர் (முத்திரை& பதிவு) வி.நல்லசிவன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பதிவுத்துறையில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில்

# கடந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது!

## கருத்துக் கேட்புக் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

சென்னை,ஜுலை.29-

பதிவுத்துறையில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த ஆண்டு 17,298.67 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் பி.மூர்த்தி கூறியுள்ளார்.

சென்னை திருவல்லிக்கேணி வாலாஜா சாலையில் அமைந்துள்ள கலைவாணர் அரங்கில் பத்திரப் பதிவு கட்டண உயர்வு குறித்து பதிவுத்துறை சார்பில் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் அமைச்சர் மூர்த்தி தலைமையில் 100க்கும் மேற்பட்ட பத்திரப்பதிவு துறையை சார்ந்த சங்கங்கள் இதில் பங்கேற்று தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

கருத்து கேட்பு கூட்டத்தினை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மூர்த்தி கூறியதாவது:

பதிவுத்துறையில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் சென்ற ஆண்டு 2022-23 ல் 17,298.67 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2023 24ல் இந்நாள் வரையில் 5,34165 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களை இரத்து செய்ய புதிய சட்டம் இயற்றப்பட்டு மாநிலம் முழுவதும் 10,555 மனுக்கள் மீது இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது இதில் 959 ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இயற்றப்பட்ட போலி ஆவணங்களை இரத்து செய்யும் பதிவு சட்டம் பிரிவு 77Aயை பின்பற்றி மற்ற மாநிலங்களும் இச்சட்டத்தை இயற்றும் முனைப்பில் உள்ளன. பதிவுத்துறையில் 3.0 ஸ்டார் புதியதாக உருவாக்கப்பட உள்ளது.

பதிவுத்துறையில் மக்களின் நலனுக்காக செங்கல்பட்டு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு புதிய மண்டலங்கள் மற்றும் 6 பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. பதிவுத்துறையில் 2021-22 ஆண்டில் 23 அலுவலகங்களுக்கும், 2022-23 ஆண்டில் 15 அலுவலகங்களுக்கும் ஆக மொத்தம் 38 அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஆவண எழுத்தர் நலனுக்கான நல நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆள் மாறாட்டத்தை அறவே ஒழித்திட ஆதார் தரவுடன் விரல்ரேகை மற்றும் கருவிழி படலம் சரிபார்க்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வரிசையாக காத்திராமல் பத்திரப் பதிவு மேற்கொள்ள முன்னுரிமை வழங்கப்படுகிறது. உரிமை ஆவணம் ஒப்படைப்பு ஆவணம், ரசீது ஆவணம், குடியிருப்புக்கான 5 வருடங்களுக்கு உட்பட்ட குத்தகை ஆவணம் ஆகியவற்றை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லாமல் வங்கி/வீட்டில் இருந்த படியே பதிவு மேற்கொள்ள இணையவழி பதிவு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மையக்கணினியில் ஆவணங்களை திருத்தம் செய்ய இயலாத வகையில் நம்பிக்கை இணையம் என்ற பிளாக் செயின் (Black Chain) தொழில்நுட்ப வசதி அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

### 'கொரோனா' காலத்தில் புன்னகை வழியாக எண்ணங்களைப் பிரதிபலித்த

# கன்னியாகுமரி மாவட்டம் - வேலம்மாள் பாட்டி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 29-**

**'கொரோனா' காலத்தில் புன்னகை வழியாக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த கன்னியாகுமரி மாவட்டம் - வேலம்மாள் பாட்டி மறைவுற்றார்.**

**அவரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

முதல்வரின் இரங்கல் செய்தி வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டி மறைந்தார் என்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன். கொரோனா பேரிடர் கால நிவாரணமாகக் கழக அரசு வழங்கிய நிவாரணத் தொகையைப் பெற்ற போது, மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த அவரது புன்னகை வழியாக



அவர் என்றும் நம்மிடையே நிலைத்திருப்பார்.

அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### பொதுக்குழு உறுப்பினர்

# திருப்பத்தூர் மகாதேவன் 10ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஜுலை 29 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்தவர் அ.மகாதேவன். பொதுக்குழு உறுப்பினரான இவர் கழகத்தின் மூத்த முன்னோடியாவார். இவர் 2013ம்ஆண்டில் சூலை 29ம்தேதி இயற்கை எய்தினார். இவரது 10வது ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப் படுகிறது.

காலை 10 மணிக்கு மகாதேவன் இல்லத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் கழக நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள் .

இதற்கான ஏற்பாடுகளை திருப்பத்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்தி கேயன் அவை தலைவர் ராம.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



மணிப்பூரில் நடந்த கொடுமைகளுக்காக ஒன்றிய அரசைக் கண்டித்து, தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் 27.7.2023 அன்று மாலை, சென்னை, ராஜரத்தினம் மைதானம் அருகில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சென்னை மாவட்ட த.பெ.தி.க. மாவட்டச் செயலாளர் குமரன், ஊடகப் பிரிவுச் செயலாளர் ஜனா விஜய் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக அ.அருண்காந்த், எம்.எஸ்.சி., எல்.எல்.பி., (5/81ஏ, சடையன்குளம், திருப்பதிசாரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 901) அவர்கள் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.7.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

### வந்தவாசி - கீழ் வில்லிவலம்

# ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.சிவகுமார் இல்ல விழா!

## எம்.எஸ்.தரணி வேந்தன் - எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ. வாழ்த்து!

வந்தவாசி, ஜுலை 29-

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம் கீழ் வில்லிவலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆர் சிவக்குமார் - எஸ். வள்ளி ஆகியோர் குழந்தைகள் எஸ்.நிலவரசன், எஸ்.சோபனா, எஸ். சோபியா, ஆகியோருக்கான விழா வந்தவாசி மேல்மருவத்தூர் சாலையில் அமைந்துள்ள எம். துரை திருமண மண்டபத்தில் நாளை (30.7.2023 - ஞாயிறு) நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழகத்தின் முன்னோடிகள் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும்கழகஉடன்பிறப்புகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர். விழாவில் கவுன்சிலர் எம்.கமலக் கண்ணன் அனைவரையும் வரவேற்கின்றார். சென்னை ஆதம்பாக்கம் மாநகரப் போக்குவரத்து பணிமனையில் தொ.மு.ச சங்க நிர்வாகிகளும் கலந்துகொள்கின்றனர்.



**சாதியை எதிர்த்து போராடுங்கள் ; அது ஜனநாயகத்திற்கு எதிரி என்பதால்!**

**மூட நம்பிக்கையை எதிர்த்துப் போராடுங்கள்; அது அறிவியலுக்கு எதிரி என்பதால் !**

**ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுங்கள்; அது சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவத்திற்கு எதிரி என்பதால் !**

**...பேரறிஞர் அண்ணா...**

### சென்னையில் நடைபெற்றது! மணிப்பூர் கொடுமைகளைக் கண்டித்து

# தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம்!

## பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜுலை 29-

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் மணிப்பூர் வன்முறை மற்றும் பெண்கள் மீது வன்கொடுமை சம்பவத்தை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் மணிப்பூர் மாநில அரசைக் கண்டித்து தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 27.7.2023 அன்று மாலை 4 மணியளவில் காயக்கட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும் மணிப்பூர் கலவரத்தை பிரதமர் மோடி அரசு மறைத்து வருகிறது என்றும் மணிப்பூர் மக்களுக்கு துணை நிற்போம் என்றும் முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் செய்தியாளர்களிடம் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கூறியதாவது:-

மணிப்பூர் மக்களைப் பிளவுபடுத்தி கலவரங்களை உருவாக்கிவிட்டு பா.ஜ.க. அரசு வேடிக்கை பார்த்து வருகிறது.

வாக்கு வங்கிகளாக இரண்டு சமூகத்தைப் பயன்படுத்திய பா.ஜ.க. அரசு, தற்போது மணிப்பூரில் பெண்கள் அமைதியாக வாழமுடியாத சூழலை உருவாக்கி உள்ளது. இந்த நிலைகண்டு உலகமே பிரதமர் மோடி அரசை விமர்சனம் செய்து வருகிறது.

மே 4 ஆம் தேதி நடந்த பெண்களுக்கு எதிரான கொடூரச் சம்பவங்கள் தற்போது தான் வெளி வந்துள்ளது. மக்கள் மனதை அந்த விவகாரம் சுக்கு நூறாக உடைத்துள்ளது.

எதுவும் தெரியாதது போல பிரதமர் மோடி முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். மணிப்பூரில் அந்த நிகழ்வு நடந்த அடுத்த நிமிடமே உளவுத் துறை மூலம் அவருக்குத் தெரிந்து இருக்க வேண்டும். ஒன்றும் தெரியாத உத்தமர் போல பிரதமர் மோடி மக்களை ஏமாற்றுகிறார். தேர்தல் ஆதாயம் கிடைக்கும் என்று தப்புக் கணக்கு போடும் பிரதமர் மோடிக்கு 2024 ஆம் ஆண்டு தேர்தலில் மிக பெரிய அடி விழும்.

தமிழ்நாட்டில் மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக தந்தை பெரியார் திராவிடர் கழகம் என்றும் துணைநிற்கும்.

பிரதமர் மோடி ஆட்சி வந்த காலம் முதல் என்ன நடந்தாலும் பத்திரிகையாளர்களை சந்திக்காத அவர் மணிப்பூர் விவகாரத்தில் முதன் முதலாக பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி கொடுத்தார்.

ஆனால் அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வந்து பேச பிரதமர் மோடி அஞ்சுகிறார். அப்படி என்றால் அவர் ஏதோ தவறு செய்து இருக்கிறார்.

எதிர்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தது என்பது மக்களுடைய நிலையை கூறுவது தான்.

இரண்டு விசயங்களை மனதில் வைத்து மோடி அரசு மணிப்பூரில் கலவரத்தைத்தூண்டி விட்டுள்ளது.

ஒன்று, அவர்களை வாக்கு வங்கிகளாக பயன்படுத்துகிறார்.

இரண்டாவது, பழங்குடியின மக்கள் நிலங்களை கார்பொரேட் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்க மோடி அரசு முயற்சித்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை மாவட்ட செயலாளர் குமரன், ஊடகப்பிரிவு செயலாளர் ஜனா விஜய் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டவர்கள், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

### பாவலர் க.மீனாட்சி சுந்தரம் துணைவியார்

# திருமதி சேது அம்மாள் மறைவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூலை 29

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் மறைந்த பாவலர் க.மீனாட்சி சுந்தரம் அவர்களின் துணைவியார் திருமதி சேது அம்மாள் (வயது 89) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவரது குடும்பத்தாருக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் தி.மு.க. இளைஞரணி சார்பாக சின்னமனூர் தனியார் மண்டபத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம் எல் ஏ தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் துணை அமைப்பாளர்கள் சுகுமாரன், பிரபாகரன், அபுதாகிர், ராமகிருஷ்ணன், முருகன், ஸ்டீபன் ராஜ் ஆகியோர் முன்னிலை வைத்தனர். ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார். செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தலைமைக் கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா, மாநில மாணவரணி தலைவர் தலைமைக் கழக பேச்சாளர் ராஜீவ் காந்தி ஆகியோர் விளக்க உரையாற்றினார்கள். மாநில தேர்தல் பணி குழு செயலாளர் செல்வேந்திரன், மாநில தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார், மாநில நெசவாளர் துணை அமைப்பாளர் ராமசாமி, மாவட்ட கழக அவை தலைவர் மனோகரன், மாவட்ட துணை செயலாளர் குரு இளங்கோ, பொதுக்குழு உறுப்பினர் முல்லை சேகர், சின்னமனூர் நகரச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.